தினமணி - 2022/09/29

# தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்த வேண்டும்

## உ.பி. ஆளுநர் ஆனந்திபென் படேல்

**கோவை, செப். 28:** தேசிய கல்விக் கொள்கையை அனைத்து மாநிலங்களும் அமல்படுத்த வேண்டும் என்றார் உத்தர பிரதேச மாநில ஆளுநர் ஆனந்திபென் படேல்.

அவிநாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் தேசிய அளவிலான கருத்தரங்கம் புதன்கிழமை நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற உத்தர பிரதேச மாநில ஆளுநர் ஆனந்திபென் படேல் பேசியதாவது:

நான் ஆளுநராகப் பொறுப்பேற்றபோது உத்தர பிரதேசத்தில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்துக்குக்கூட தேசியத்தர மதிப்பீடு வழங்கப்படவில்லை. தொடர் ஆய்வுகள் நடத்தி, பல்கலைக்கழக நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தி தரத்தை உயர்த்தினோம். இதன் பலனாக, தற்போது அங்கு 2 பல்கலைக்கழகங்களுக்கு ஏ-கிரேடும், ஒரு பல்கலைக்கழகத்துக்கு பி-கிரேடும் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்துவதன் மூலம் மாணவர்கள் கல்வித் தரம் உயரும். மாநிலங்களுக்கும், மத்திய அரசுக்கும் இடையே அரசியல் ரீதியான கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அவற்றைக் களைந்து தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்துவது நமது கடமை. மாணவர்களின் நலனுக்காக இதைச் செய்துதான் ஆக வேண்டும்.

இந்தியாவை காசநோய் இல்லாத நாடாக மாற்ற மத்திய அரசு முயற்சி செய்து வருகிறது. தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ், உத்தர பிரதேசத்தில் 85 ஆயிரம் காசநோயாளிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர் என்றார்.

நிகழ்ச்சியில், அவிநாசிலிங்கம் கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் தி.ச.க. மீனாட்சிசுந்தரம், அவிநாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தின் வேந்தர் ச.ப. தியாகராஜன், துணைவேந்தர் பாரதி ஹரிசங்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



அவிநாசிலிங்கம் கல்லூரியில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் மாணவிக்கு சான்றிதழ் வழங்கிய உ.பி. ஆளுநர் ஆனந்திபென் படேல். உடன், அவிநாசிலிங்கம் கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் தி.ச.க.மீனாட்சிசுந்தரம், அவிநாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தின் வேந்தர் ச.ப.தியாகராஜன், துணைவேந்தர் பாரதி ஹரிசங்கர் உள்ளிட்டோர்.